# West Sussex SEND தகவல், ஆலோசனை மற்றும் ஆதரவு சேவை

## EHC தேவைகள் மதிப்பீடு



west sussex county council

இந்தத் தகவல் கல்வி, உடல்நலம் மற்றும் கவனிப்புத் தேவைகள் மதிப்பீடு (EHC தேவைகள் மதிப்பீடு) பற்றியதாகும், இதைப் பொதுவாக 'சட்டப்பூர்வ மதிப்பீடு' என்று குறிப்பிடுவர். இதில் பின்வருவன அடங்கும்:

- தொடக்க நிலை அமைப்பில் உள்ள குழந்தைகள்
- கட்டாயம் பள்ளி செல்ல வேண்டிய வயது அடைந்த குழந்தைகள்
- 16 முதல் 25 வயதுக்குட்பட்ட கல்லூரி அல்லது மேற்படிப்பில் உள்ள இளம் பருவத்தினர்

பின்வருவன பற்ற்ய எங்கள் கைப்பிரதிகளையும் நீங்கள் பார்க்கலாம்: **கல்வி, உடல்நலம் மற்றும் கவனிப்புத் திட்டங்கள்**

## EHC தேவைகள் மதிப்பீடு என்றால் என்ன?

EHC தேவைகள் மதிப்பீடு என்பது ஒரு குழந்தை/இளம் நபரின் சிறப்புக் கல்வித் தேவைகள் மற்றும் அவர் கல்வி கற்க தேவைப்படும் ஆதரவு ஆகியவைப் பற்றி விரிவாக அறிந்து கொள்வதாகும் (SEN).

### குழந்தைகள் மற்றும் குடும்பத்தினர் சட்டம் 2014 (Children and Families Act 2014)

இன்படி தேவைகள் மதிப்பீடுகளைச் செய்வது உள்ளூர் நிர்வாக அமைப்பு அதிகாரிகளின் பொறுப்பாகும்

தேவைகள் மதிப்பீட்டில், பின்வருவன பற்றிய தகவல்கள் திரட்டப்பட்டு ஒன்றிணைக்கப்படும்:

- உங்கள் குழந்தையால் என்ன செய்ய முடியும் மற்றும் முடியாது என்பது
- குழந்தைக்குத் தேவைப்படும் ஏதேனும் விசேஷ உதவி.

இதில் பின்வரும் நபர்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்கள் அடங்கும்:

- நீங்கள்
- உங்கள் குழந்தை/இளம் பருவத்தினர்
- கற்பித்தல் தொடங்கும் வயதில் உள்ள குழந்தைகளின் சூழலில் உள்ளவர்கள், பள்ளி அல்லது 16 வயதுக்கு பிந்தைய கல்வியை வழங்குபவர்

- உங்கள் குழந்தை/இளம் பருவத்தினருடன் பணிபுரியும் அல்லது ஆதரவளிக்கும் மற்ற தொழில்முறை பணியாளர்கள்.

இந்த மதிப்பீடு, உங்கள் குழந்தைக்கு
**கல்வி, உடல்நலம் மற்றும் கவனிப்பு திட்டம் (EHC திட்டம்)**
தேவையா என்று அறிந்துகொள்வதற்காகச் செய்யப்படுகிறது.

## எப்போது EHC தேவைகள் மதிப்பீடு அவசியமாகிறது?

பள்ளி, கற்பித்தல் தொடங்கும் அமைப்பு அல்லது 16 வயதுக்கு பிந்தைய உதவிகளை வழங்குபவர் பெரும்பாலான நேரங்களில் SEN ஆதரவு மூலம் உங்கள் குழந்தைக்கு உதவ முடியும். இதன் பொருள், உங்கள் குழந்தையின் தேவைகளை நிறைவேற்ற பள்ளியால் கூடுதல் அல்லது வேறு வகையான வசதிகளை செய்ய முடியும் என்பதாகும். சில நேரங்களில் பிற தொழில்சார் பணியாளர்களும் உங்கள் குழந்தை கற்பதற்கு உதவ ஆலோசனை அல்லது ஆதரவை வழங்குவார்கள்.

சில குழந்தைகளுக்கு இன்னும் தீவிரமான, விசேஷ உதவி தேவைப்படும். SEN ஆதரவு வழங்கப்பட்டப் பிறகும் உங்கள் குழந்தை மேம்பாட்டையும் அடையவில்லை என்றால், ஒரு EHC தேவைகள் மதிப்பீடு அடுத்தக் கட்டத்தில் செய்யவேண்டியிருக்கலாம்.

### **SEND நடைமுறை விதிகள்** கூறுவது:

> ஒரு EHC தேவைகள் மதிப்பீடு தேவையா என்று பரிசீலிக்கும்போது, கற்பித்தல் தொடங்கும் அமைப்பு, பள்ளி அல்லது 16 வயதுக்குப்பின் செல்லும் கல்வி நிறுவனம் போன்றவை குழந்தையின் சிறப்பு கல்வி தேவைகளைக் கண்டறிய, மதிப்பிட மற்றும் பூர்த்தி செய்ய தேவையான தொடர்புடைய மற்றும் இலக்குடைய நடவடிக்கைகள் எடுத்த பின்பும் குழந்தை அல்லது இளம் பருவத்தினர் எதிர்பார்த்த மேம்பாட்டை அடையவில்லை என்பதற்கான ஆதாரம் இருக்கிறதா என்பதை உள்ளூர் நிர்வாகம் பரிசீலிக்க வேண்டும். (9.14)

உள்ளூர் நிர்வாகம் பின்வருவனவற்றை கவனிக்க வேண்டும்:

- உங்கள் குழந்தை எட்டிய இலக்குகள் மற்றும் மேம்பாட்டின் வேகம்
- அவர்களின் கல்விசார்ந்த சிறப்பு தேவைகள்
- முன்பே என்னவெல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன
- ஆதரவால் பெறப்பட்ட வேறுபாடு
- உங்கள் குழந்தையின் உடல்பூர்வ, உணர்வுபூர்வ மற்றும் சமூக மேம்பாட்டு மற்றும் உடல்நலத் தேவைகள்

### **SEND நடைமுறை விதிகள்** கூறுவது:

EHC திட்டத்திற்கு இணங்க, குழந்தை அல்லது இளம்பருவத்தினருக்கு சிறப்புக் கல்வி வசதிகளை உருவாக்கித் தர வேண்டிய அவசியம் உள்ளது என்று உள்ளூர் நிர்வாகம் கருதும்போது, அது கல்வி, உடல்நலம் மற்றும் கவனிப்பு தேவைகள் மதிப்பீட்டைக் கண்டிப்பாக நடத்த வேண்டும். (9.3)

EHC தேவைகள் மதிப்பீடு மற்றும் EHC திட்டம் தேவைப்படுவதைத் தெளிவாகச் சுட்டிக்காட்டும் தேவைகள் சில குழந்தைகள் மற்றும் இளம்பருவத்தினருக்கு இருக்கும். இதுபோன்ற நிலையை உள்ளூர் நிர்வாக அமைப்பு அறிந்து கொண்டால், எந்தவொரு தாமதமும் இல்லாமல் செயல்முறையைத் தொடங்க வேண்டும்.

உள்ளூர் நிர்வாக அமைப்பின் அதிகாரிகள் பின்பற்ற வேண்டிய தேர்வளவைகளைப் பற்றிய மேலும் விவரங்களை நீங்கள் **SEND நடைமுறை விதிகளின்** பிரிவுகள் 9.3 மற்றும் 9.14 முதல் 9.16 வரையிலும் அறிந்து கொள்ளலாம்.

பின்வரும் வெஸ்ட் சஸ்ஸெக்ஸ் உள்ளூர் நிர்வாகச்செய்தி இணையதளத்திலும் SEND நடைமுறை விதிகளின் இணைப்பை நீங்கள் காணலாம்:

westsussex.local-offer.org

## EHC தேவைகள் மதிப்பீட்டை யாரெல்லாம் கோரலாம்?

- பெற்றோர் - உள்ளூர் நிர்வாகத்திற்கு எழுதி கேட்பதன் மூலம்
- 16 வயதுக்கு மேற்பட்ட ஆனால் 25 வயதுக்கு குறைவான இளம்பருவத்தினர்
- தொடக்க நிலை சூழலை வழங்கும் அமைப்பு, பள்ளி அல்லது 16 வயதுக்கு பின்பு செல்லும் கல்வி அமைப்பு, ஆனால் முதலில் உங்களிடம் பேசிய பிறகு மட்டுமே.

EHC தேவைகள் மதிப்பீட்டைக் கோருவதற்கு முன்பு பள்ளி அல்லது தொடக்க நிலைச் சூழலை வழங்கும் அமைப்பினருடன் பேசுவது எப்போதுமே நல்லது.

உதவி கோருவதற்கு வெஸ்ட் சஸ்ஸெக்ஸ், ஆலோசனை மற்றும் ஆதரவு சேவை உங்களுக்கு உதவ முடியும்.

உங்கள் மருத்துவர் அல்லது உடல்நல கவனிப்பாளர் போன்றவர்களும் உங்கள் குழந்தைக்கு மதிப்பீடு தேவைப்படுகிறது என்று கருதுவதாக, உள்ளூர் நிர்வாகத்துக்குத் தெரிவிக்க முடியும்.

## உள்ளூர் நிர்வாகத்துக்கு EHC தேவைகள் மதிப்பீட்டுக்கான கே வரப்பெற்றால் என்ன நிகழும்?

EHC தேவைகள் மதிப்பீட்டுக்கான கோரிக்கை உள்ளூர் நிர்வாகத்துக்கு வந்து சேர்ந்தவுடன், அதைப் பற்றி அவர்கள் உங்களிடம் தெரிவித்தாக வேண்டும்.

### SEND நடைமுறைகள் விதிகள் கூறுவது:

> EHC தேவைகள் மதிப்பீடு தேவையா என்று பரிசீலிக்கும்போது, உள்ளூர் நிர்வாக அதிகாரிகள், குழந்தை மற்றும் பெற்றோர் அல்லது இளம்பருவத்தினரின் எண்ணங்கள், விருப்பங்கள் மற்றும் உணர்வுகளை உன்னிப்பாக கவனிக்க வேண்டும். (9.12)

தேவைகள் மதிப்பீட்டைச் செய்ய வேண்டுமா என்று தீர்மானிக்க உள்ளூர் நிர்வாக அதிகாரிகள் ஆறு வாரங்கள் வரை எடுத்துக் கொள்ளலாம். இந்த நேரத்தில், அவர்கள், உங்களிடம், பள்ளியிடம் அல்லது பிற நிபுணர்களிடம் தகவல்களைக் கேட்டுப் பெறக் கூடும்.

எல்லா தகவல்களையும் பெற்றவுடன், பின்வருவனவற்றில் அதன் முடிவை உங்களிடம் தெரிவிக்கும், அவையாவன:

EHC தேவைகள் மதிப்பீட்டை உடனடியாகத் தொடங்குதல்

அல்லது

EHC தேவைகள் மதிப்பீடு தேவையில்லை என்பது.

## EHC தேவைகள் மதிப்பீடு அவசியமில்லை என்று உள்ளூர் நிர்வாகம் முடிவெடுத்தால் என்ன நடக்கும்?

EHC தேவைகள் மதிப்பீடு தேவைப்படாது என்று கருதுவதற்கான என்பதற்கான காரணத்தையும் பின்வரும் விவரங்களையும் உள்ளூர் நிர்வாக அதிகாரிகள் உங்களிடம் கண்டிப்பாகத் தெரிவிக்க வேண்டும்:

- மேல்முறையீட்டுக்கான உங்கள் உரிமை
- சார்பற்ற ஏற்பின்மை தீர்வு மற்றும் நடுவரிடம் முறையிடல்
- எப்படி கூடுதல் தகவல், ஆலோசனை அல்லது ஆதரவைப் பெறுவது என்ற விவரம்.

முடிவை நீங்கள் ஏற்கவில்லை என்றால், உங்களுக்கு உள்ள விருப்பத்தேர்வுகளைப் பற்றி வெஸ்ட் சஸ்ஸெக்ஸ் தகவல், ஆலோசனை மற்றும் ஆதரவு சேவை விளக்கிக் கூறும்.

## EHC தேவைகள் மதிப்பீடு அனுமதிக்கப்பட்டால் என்ன நடக்கும்?

### **SEND நடைமுறை விதிகள்** கூறுவது:

> மதிப்பீட்டு செயல்முறை நடக்கும் போதும், EHC திட்டத்தைத் தயாரிக்கும்போதும் உள்ளூர் நிர்வாக அதிகாரிகள், குழந்தை மற்றும் குழந்தையின் பெற்றோர் அல்லது இளம்பருவத்தினரைத் தொடர்ந்து கலந்தாலோசிக்க வேண்டும். சாத்தியமான வரையிலும் குழந்தையையும் இந்தச் செயல்முறையில் ஈடுபடுத்த வேண்டும். தனிப்பட்ட குழந்தை மற்றும் இளம் பருவத்தினரின் தேவைகளே மதிப்பீடு மற்றும் திட்டமிடுதல் செயல்முறையின் மையமாக இருக்க வேண்டும். (9.21)

உள்ளூர் நிர்வாக அதிகாரிகள் என்ன நடக்கும் என்பதை உங்களிடம் தெரிவிப்பார்கள், மேலும் உங்கள் கருத்துகளைக் கேட்பார்கள். உங்கள் எண்ணங்களும் உங்கள் குழந்தையின் எண்ணங்களும் மிகவும் முக்கியமானவை. West Sussex SEND தகவல், ஆலோசனை மற்றும் ஆதரவு சேவை உங்களுக்கு தகவல், ஆலோசனை மற்றும் ஆதரவை வழங்கி, இதில் உதவ முடியும்.

உங்கள் குழந்தையைப் பற்றிய விவரங்களை, உள்ளூர் நிர்வாகம் பல நபர்களிடமும் கூட கேட்கும். இதுவே ‘ஆலோசனை’ என்றழைக்கப்படுகிறது, இதில் பின்வருவன பற்றிய விவரங்கள் உள்ளடங்கும்:

- உங்கள் குழந்தையின் கல்வி, உடல்நலம் மற்றும் கவனிப்பு தேவைகள்
- உங்கள் குழந்தைக்கான விரும்பப்படும் பலன்கள்
- குழந்தையின் தேவைகளைப் பூர்த்தி செய்து, விரும்பப்படும் பலன்களை அடைவதற்குத் தேவைப்படும் சிறப்பு கல்வி, உடல்நல மற்றும் கவனிப்பு வசதிகள்.

பின்வரும் நபர்களிடமிருந்து உள்ளூர் நிர்வாகம் ஆலோசனை மற்றும் தகவல்களைக் கேட்க வேண்டும்:

- பெற்றோர் (அல்லது இளம்பருவத்தினர்)
- உங்கள் குழந்தையின் தொடக்க நிலை சூழலை வழங்குபவர்கள் அல்லது மழலையர் பள்ளி அல்லது பள்ளி அல்லது கல்வி நிறுவனத்தில் சேர்ந்திருக்கவில்லை என்றால் குழந்தைக்கான அல்லது இளம்பருவத்தினருக்கான கற்பித்தல் வசதிகளை வழங்குவதற்கு பொறுப்பானவர்
- கல்வியியல் உளவியலாளர்
- உங்கள் குழந்தை செயலாற்றும் உடல்நல கவனிப்பாளர்கள். இதில் குழந்தை நல மருத்துவர், பேச்சு மற்றும் மொழி சிகிச்சையாளர், உடலியக்க மருத்துவர் அல்லது வாழ்வியல் சிகிச்சையாளர் போன்றவர்களும் அடங்குவர்.
- சமூக கவனிப்பு பணியாளர்
- நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளும் தொடர்புடைய ஆலோசனையை வழங்கக்கூடிய வேறு ஏதேனும் நபர்.

உங்கள் குழந்தைக்கு பார்வை அல்லது கேட்டல் குறைபாடு இருந்தால், பொருத்தமான தகுதி வாய்ந்த ஆசிரியரிடமும் உள்ளூர் நிர்வாக அமைப்பு தகவல் மற்றும் ஆலோசனையைப் பெறும்.

உள்ளூர் நிர்வாக அமைப்பு உங்கள் குழந்தையின் எண்ணங்களையும் அறிந்து கொள்ள முயற்சி செய்ய வேண்டும். இதில் நீங்கள், பள்ளி அல்லது பிற நிபுணர்கள் உதவலாம். குழந்தை தனது கருத்துக்களைத் தெரிவிக்க யாரேனும் உதவி செய்ய

வேண்டும் என்று நீங்கள் கருதினால், அதைப் பற்றிய கூடுதல் விவரங்களை வெஸ்ட் சஸ்ஸெக்ஸ் தகவல், ஆலோசனை மற்றும் ஆதரவு சேவையிடம் கேட்கலாம்.

தேவைகள் மதிப்பீட்டில் பங்கேற்கும் அனைவருடனும் உங்கள் குழந்தையைப் பற்றி கலந்தாலோசிக்க உங்களுக்கு வாய்ப்பு கிடைக்கும், மேலும் தேவைகள் மதிப்பீடு முடிவடைந்தவுடன் எல்லா அறிக்கைகளின் நகல்களும் உங்களுக்குத் தரப்படும்.

EHC தேவைகள் மதிப்பீட்டின்போது, உங்களுக்கு ஏதேனும் தகவல், ஆலோசனை அல்லது ஆதரவு தேவைப்பட்டால், வெஸ்ட் சஸ்ஸெக்ஸ் பெற்றோர் பங்கேற்பு சேவையைத் (West Sussex Parent Partnership Service) தொடர்பு கொள்ளவும். இதில் உங்களுக்கான ஒரு சார்பற்ற ஆதரவாளரைக் கொண்டிருப்பதும் அடங்கும். EHC தேவைகள் மதிப்பீடுகளுக்கான ஆலோசனை மற்றும் தகவல்களைப் பற்றி மேலும் தகவல்களை **SEND நடைமுறை விதிகளின் பிரிவுகள்** 9.45 – 9.52இல் அறியலாம்.

## இந்த ஆலோசனையில் சில பகுதிகள் ஏற்கனவேருக்கின்றன எ என்னவாகும்?

மற்ற நிபுணர்களும் உங்கள் குழந்தையுடன் செயலாற்றுவதால், சில நேரங்களில் ஆலோசனையும் தகவல்களும் ஏற்கனவே உங்களுக்கு கிடைத்திருக்கும்.

**SEND நடைமுறை விதிகள்** கூறுவது:

> (ஏதேனும் காரணத்துக்காக) ஒரு ஆலோசனை முன்பே வழங்கப்பட்டிருந்தால், மேலும் அந்த ஆலோசனையை வழங்கும் நபர், உள்ளூர் நிர்வாக அமைப்பு மற்றும் குழந்தையின் பெற்றோர் அல்லது இளம்பருவத்தினர் என அனைவரும் அது போதுமானது என்று திருப்தியுடன் இருந்தால், மதிப்பீட்டு செயல்முறைக்கு உள்ளூர் நிர்வாக அமைப்பு கண்டிப்பாக மேலும் ஆலோசனையைக் **கோரக் கூடாது.** இந்த முடிவை எடுக்கும்போது, உள்ளூர் நிர்வாகமும், ஆலோசனையை வழங்கியவரும், தரப்பட்ட ஆலோசனை அப்போதைய காலக்கட்டத்திற்கும் பொருந்துகிறதா என்பதை உறுதிசெய்ய வேண்டும். (9.47)

## EHC தேவைகள் மதிப்பீடு எப்போது முடிவடையும்?

உள்ளூர் நிர்வாகத்திற்கு எல்லா தகவல்களும் ஆலோசனையும் கிடைத்தவுடன், உங்கள் குழந்தைக்கு கல்வி, உடல்நலம் மற்றும் கவனிப்பு திட்டம் தேவைப்படுகிறதா என்பதை முடிவு செய்தாக வேண்டும்.

EHC திட்டம் என்பது உள்ளூர் நிர்வாக அமைப்பு அதிகாரியால் எழுதப்படும் சட்டப்பூர்வ ஆவணம் ஆகும். ஒரு குழந்தை அல்லது இளம்பருவத்தினருக்கு இருக்கும் சிறப்புக் கல்வித் தேவைகளும் அவற்றைப் பூர்த்தி செய்ய அவருக்கு தர வேண்டிய உதவிகளையும் இது விவரிக்கும். மேலும் இதில் தேவையான உடல்நல மற்றும் கவனிப்பு வசதிகளும் உள்ளடங்கும். EHC திட்டங்களைப் பற்றிய மேலும் விவரங்களை உள்ளூர் நிர்வாகச் செய்தி இணையத்தளத்தில் படிக்கலாம்: westsussex.local-offer.org

சில நேரங்களில், ‘SEN ஆதரவு’ மூலமாகப் பூர்த்தி செய்யக்கூடிய சிறப்புக் கல்வித் தேவைகள் உங்கள் குழந்தையிடம் இருப்பதாக உள்ளூர் நிர்வாகம் முடிவு செய்யும். அவ்வாறு நிகழ்ந்தால், EHC தேவைகள் மதிப்பீட்டுக்கான கோரிக்கையைப் பெற்ற 16 வாரங்களுக்குள் உள்ளூர் நிர்வாகம் கண்டிப்பாக அதன் முடிவை உங்களிடம் தெரிவித்தாக வேண்டும். உள்ளூர் நிர்வாகம் மேல்முறையீடு செய்வதற்கான உங்களுடைய உரிமையைப் பற்றியும் தெரிவித்தாக வேண்டும்.

ஒரு EHC திட்டம் தேவை என்று உள்ளூர் நிர்வாகம் தீர்மானித்தால், அது முதலில் ஒரு வரைவு திட்டத்தை எழுதியாக வேண்டும். அதன் பிறகு அது வரைவு EHC திட்டத்தையும் அறிக்கைகளின் நகல்களையும் உங்களுக்கு அனுப்பி வைக்கும், அவற்றை நீங்கள் படித்து பார்க்கலாம். அதில் நீங்கள் முக்கியமானவை என்று கருதும் அனைத்தும் சேர்க்கப்பட்டுள்ளதா என்று சோதிக்கவும், அதில் குறிப்பிட்ட பலன்கள் மற்றும் முன்மொழியப்பட்ட வசதிகள் ஆகியவற்றை ஏற்றுக் கொள்ளவும் வேண்டும். உங்கள் குழந்தை எந்தப் பள்ளிக்கு செல்ல நீங்கள் விரும்புகிறீர்கள் என்றும் உள்ளூர் நிர்வாகம் உங்களிடம் கேட்கும்.

கருத்துக்களைத் தெரிவிக்க, சந்திப்பை ஏற்பாடு செய்ய கோர அல்லது வரைவு திட்டத்தை ஏற்க உங்களுக்கு 15 நாட்கள் தரப்படும்.

15 நாட்களுக்குள் நீங்கள் பதில் அளிக்கவில்லை என்றால், நீங்கள் வரைவு திட்டத்தை ஏற்றுக் கொண்டதாக உள்ளூர் நிர்வாக அமைப்பு கருதும், எனவே தரப்பட்டுள்ள விருப்பத்தேர்வுகளைப் பரிசீலிக்க கூடுதல் நேரம் தேவை என்று நீங்கள் நினைத்தால், உள்ளூர் நிர்வாக அமைப்பிடம் தெரிவிக்கவும்.

## விருப்பமான பள்ளியைத் தேர்ந்தெடுக்கலாமா?

**SEND நடைமுறை விதிகள்** பின்வரும் சூழ்நிலைகள் வரையிலும் உங்கள் விருப்பங்களைப் பரிசீலிக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறது

- குழந்தையின் அல்லது இளம்பருவத்தினரின் வயது, திறன், இயல்பு அல்லது SENக்குப் பொருத்தமானதாக இருக்கும் வரை,

அல்லது

- குறிப்பிட்ட இடத்தில் குழந்தை அல்லது இளம்பருவத்தினரின் இருப்பு, மற்றவர்களுக்கு திறம்பட கற்பித்தலுக்கு ஏற்றதாக **இருக்காது** அல்லது வளங்களைத் திறம்பட பயன்படுத்தாது எனும்போது. (9.79)

உள்ளூர் நிர்வாக அமைப்பு செய்ய வேண்டிய கடைசி பணி, உங்களுக்கு இறுதி EHC திட்டத்தை அனுப்பி வைப்பதே ஆகும். அப்போதும் திட்டம் உங்களுக்குத் திருப்தியாக இல்லையென்றால் அல்லது உள்ளூர் நிர்வாக அமைப்புடன் உங்களால் உடன்பட முடியவில்லை என்றால், நடுவரை அணுக மற்றும்/அல்லது மேல்முறையீடு செய்ய உங்களுக்கு உரிமை உள்ளது (கீழே காணவும்).

எந்தவொரு கட்டத்திலும் உங்களுக்கு உதவி தேவைப்பட்டாலும், நீங்கள் West Sussex SEND தகவல், ஆலோசனை மற்றும் ஆதரவு சேவையைத் தொடர்பு கொள்ளலாம்.

## இதற்கு எத்தனை நாட்களாகும்?

| | |
|---|---|
| உள்ளூர் நிர்வாக அமைப்பு EHC தேவைகள் மதிப்பீட்டிற்கான கோரிக்கையைப் பெறுகிறார். இந்தக் கோரிக்கையைப் பற்றி அதிகாரி பெற்றோரிடம் தெரிவிக்க வேண்டும் | இதுதான் தொடக்கத் தேதி |
| EHC தேவைகள் மதிப்பீடு தேவையா என்று உள்ளூர் நிர்வாக அமைப்பு முடிவெடுக்கும். அதன் முடிவைப் பற்றி அதிகாரி பெற்றோரிடம் தெரிவிக்க வேண்டும் | தொடக்கத் தேதிக்குப் பின் ஆறு வாரங்களுக்குள் |
| EHC தேவைகள் மதிப்பீடு பின்வருமாறு நடைபெறும் | முடிவு எடுத்தவுடன் இது தொடங்கும் |
| முதலாவது | |
| உள்ளூர் நிர்வாக அமைப்பு, EHC திட்டத்தை வெளியிட வேண்டாம் என்று முடிவெடுத்ததை பெற்றோரிடம் தெரிவிக்கும் | தொடக்கத் தேதிக்குப் பின் 16 வாரங்களுக்குள் |
| அல்லது | |

| | |
|---|---|
| வரைவு EHC திட்டத்தைப் பெற்றோருக்கு அனுப்பி வைக்கும் | தொடக்கத் தேதிக்குப் பின் 16 வாரங்களுக்குள் |
| வரைவு EHC திட்டத்திற்கு பெற்றோர் பதிலளிக்க வேண்டும். அவர்கள் பின்வருவனவற்றை செய்யலாம்:<br>• வரைவு துல்லியமாக இருப்பதாக ஏற்கலாம்<br>• மாற்றங்கள் செய்யக் கேட்கலாம்<br>• சந்திப்புக்காகக் கோரலாம்.<br>பள்ளி அல்லது தொடக்க நிலை அமைப்புக்கான விருப்பத்தேர்வையும் பெற்றோர் குறிப்பிட வேண்டும் | வரைவு EHC திட்டத்தைப் பெற்ற 15 நாட்களுக்குள் |
| உள்ளூர் நிர்வாக அமைப்பு பள்ளி அல்லது தொடக்க நிலை அமைப்புடன் கலந்தாலோசிக்கும் | வரைவு EHC திட்டத்திற்கு பெற்றோர் பதிலளித்த 15 நாட்களுக்குள் |
| இறுதி EHC திட்டத்தை உள்ளூர் நிர்வாக அமைப்பு வழங்கும். | தொடக்கத் தேதியிலிருந்து 20 வாரங்களுக்குள் |

சில விதிவிலக்கான சூழல்களில், இந்த கால அளவுகள் வேறுபடலாம். **SEND நடைமுறை விதிகளின்** 9.42 பிரிவைக் காணவும்.

## EHC தேவைகள் மதிப்பீடு தொடர்பான உள்ளூர் நிர்வாக அமைப்பு மு
## அல்லது EHC திட்டத்தை நான் ஏற்கவில்லை என்றால் என்னவாகும்?

எந்தவொரு கட்டத்திலும் உள்ளூர் நிர்வாக அமைப்பு ஊழியர்களில் ஒருவரிடம் நீங்கள் பேசுவதற்கு கோரலாம். EHC தேவைகள் மதிப்பீட்டுக்கான கோரிக்கையைப் பெற்ற பிறகு உள்ளூர் நிர்வாக அமைப்பு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நபராகவே நீங்கள் சந்திக்கவிருக்கும் நபர் இருப்பார்.

West Sussex SEND தகவல், ஆலோசனை மற்றும் ஆதரவு சேவை உங்களுக்கு இருக்கும் வாய்ப்புகள் குறித்து சார்பற்ற தகவல்களையும் ஆலோசனையும் வழங்கும், மேலும் இந்தச் செயல்முறை முழுவதும் உங்களுக்கு துணையாக இருக்கும்.

நடுவர் உதவியை நாடுவதை பரிசீலிப்பதற்கு பெரும்பாலான சூழல்களில் உங்களுக்கு உரிமை இருக்கும். இதைப் பற்றிய கூடுதல் விவரங்களை உள்ளூர் நிர்வாகச் செய்தி இணையதளத்தில் காணலாம்: westsussex.local-offer.org மற்றும் **SEND நடைமுறை விதிகள்** பகுதி 9இல் காணலாம்.

## தேவைகள் மதிப்பீடு செய்யப்படுமா?

செப்டம்பர் 2014 மற்றும் ஏப்ரல் 1, 2018 ஆகியவற்றுக்கு இடைப்பட்ட காலத்தில், சிறப்புக் கல்வித் தேவைகள் அறிக்கைகளை உள்ளூர் நிர்வாக அமைப்புகள் மெதுவாக புதிய அமைப்புக்கு மாற்றுவார்கள். உங்கள் குழந்தைக்கு அவ்வாறு நிகழும்போது, EHC திட்ட மாற்றுதல் மதிப்பாய்வு நடக்கும்.

இந்த மதிப்பாய்வில், EHC தேவைகள் மதிப்பீடு உள்ளடங்கும். மாற்றுதல் மதிப்பாய்வின் ஒரு பகுதியாக, நீங்கள், உங்கள் குழந்தை அல்லது இளம்பருவத்தினர் ஒரு சந்திப்பில் கலந்து கொள்ள அழைக்கப்படுவீர்கள்.

ஏற்கனவே உள்ள அறிக்கை, மதிப்பாய்வு அறிக்கைகள் மற்றும் பிற தகவல்களே போதுமானவை என்று நீங்களும், உள்ளூர் நிர்வாக அமைப்பு மற்றும் ஆலோசனையை வழங்கும் நபர்கள் ஆகியோர் ஒப்புக்கொண்டால், ஏற்கனவே உள்ளவை போதுமானதாக இருக்கலாம். அவை போதுமானவை அல்ல என்று நீங்கள் கருதினால், மேலும் தகவல்களைச் சேகரிக்கவும் ஆலோசனையைப் பெற உள்ளூர் நிர்வாக அமைப்பிடம் நீங்கள் கேட்கலாம்.

உள்ளூர் நிர்வாகச் செய்தி இணையதளத்தில் கூடுதல் தகவல்களை அறியலாம்: westsussex.localoffer.org

கல்வி, உடல்நலம் மற்றும் கவனிப்பு தேவைகள் மதிப்பீடுகளைப் பற்றி **SEND நடைமுறை விதிகள்** பகுதி 9 இல் படிக்கலாம்.

EHC தேவைகள் மதிப்பீடுகளுக்காக உள்ளூரில் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளைப் பற்றிய கூடுதல் விவரங்களை உள்ளூர் நிர்வாகச் செய்தியில் காணலாம்.

## West Sussex SEND தகவல், ஆலோசனை மற்றும் ஆதரவு சேவையால் பின்வருவனவற்றை உங்களுக்கு வழங்க முடியும்:

- EHC தேவைகள் மதிப்பீடுகள் பற்றிய விவரங்கள்
- மதிப்பீட்டின் காலத்தில் தேவையான ஆலோசனை மற்றும் ஆதரவு
- சார்பற்ற ஆதரவுக்காக செய்யப்பட்ட உள்ளூர் ஏற்பாடுகளின் விவரங்கள்
- பிற நிறுவனங்கள், ஆதரவுக் குழுக்கள் மற்றும் சேவைகளின் விவரங்கள்
- புகார் அளித்தல், ஒப்புதல் இன்மைக்கான சார்பற்ற தீர்வு அல்லது நடுவரை நாடுதல் ஆகியவற்றில் உங்களுக்கு உள்ள உரிமைகள் குறித்த தகவல், ஆலோசனை மற்றும் ஆதரவு.

## West Sussex SEND தகவல், ஆலோசனை மற்றும் ஆதரவு சேவையை

**உதவி எண்:** 0330 222 8555

### அஞ்சல் முகவரி

SEND Information, Advice and Support Service

St James Campus

St James Road

Chichester

West Sussex

PO19 7HA

**மின்னஞ்சல் முகவரி:** send.ias@westsussex.gov.uk

**எங்கள்  இணையதளங்களையும் நீங்கள் பார்க்கலாம்:**

https://westsussex.local-offer.org/services/7

**SEND** = சிறப்புக் கல்வித் தேவைகள் மற்றும் உடல்குறைபாடு (Special Educational Needs and Disabilities)

எல்லா பெற்றோருக்கும் பாகுபாடற்ற தகவல்கள், ஆலோசனைகள் மற்றும் ஆதரவு சென்று சேர்வதை உறுதிப்படுத்துவதே WS SEND IAS இன் பங்காகும், இதன் மூலம் பெற்றோர், தங்கள் குழந்தையின் சிறப்புக் கல்வித் தேவைகளைப் பற்றிய தகவல் அறிந்த முடிவுகளை எடுக்க முடியும். பாதிப்பு உடைய குடும்பங்களுக்கு அவர்களுடைய சூழல்களில் உதவக்கூடிய தனிநபர்கள், சேவைகள் அல்லது ஏஜென்சிகளுடன் பகிர்ந்து கொள்வதற்கான அனுமதி பெறப்பட்டால் தவிர WS SEND IAS உடன் பகிர்ந்து கொள்ளப்படும் தகவல்கள் ரகசியமாகவே வைக்கப்படும்.

west sussex county council

www.westsussex.gov.uk

WS1037 09.16